**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (இரணைமடுக் கூறு) -2017.**

---

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் (இரணைமடுக் கூறு) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2711–எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் உறுப்புரை, II பீ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் , விளையாட்டு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் வட மாகாண சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இரணைமடுக் குளத்தின் தண்ணீர் தேக்கி வைத்திருக்கும் இயலளவை அதிகரிப்பதற்காக அதனை வலுப்படுத்திப் பெருப்பிப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 2,198.30 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 16.91 மில்லியனானதுடன் அதில் ரூபா 1,753.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.49 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 மே 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட காலம் 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31

இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 13.49 | 1,753.70 | 741.00 | 4.16 | 630.38 | 8.61 | 1265.26 |
| இலங்கை அரசாங்கம் | 3.42 | 444.60 | 168.00 | 1.29 | 168.00 | 2.58 | 335.13 |
| | **16.91** | **2,198.30** | **909.00** | **5.45** | **798.38** | **11.19** | **1600.39** |

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நீர் வளத்தை பகிர்தல் தொடர்பில் இரணைமடுப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளிடமிருந்தான எதிர்ப்புக்கள் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 இல் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அத்தகைய நடவடிக்கைகள் 2015 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 2,198.30 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 16.91 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1600.39 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 11.19 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

அணைக்கட்டு, நீர் வடிகால் மற்றும் ஆரக் கதவுகள் என்பவற்றின் புனரமைப்பு, பத்திரிப்பு பாதுகாப்புக்கள், பாலங்கள் மற்றும் நீரோட்ட கட்டமைப்புக்கள் மற்றும் நீரோடை கால்வாய்கள் என்பவற்றின் நிர்மாணம் மற்றும் இரணைமடுக் குளத்தின் ஏற்று நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பு ஆகியவற்றிற்காக 05 பொதிகளின் கீழ் 2016 ஏப்ரலில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 14 க்கு முன்னர் பூரணப்படுத்த எதிர்பார்த்திருந்தது. இதற்கு மேலாக மாங்குளத்தில் மாகாண நீர்ப்பாசன திணைக்கள அலுவலகத்திற்கான கட்டடம் இச்செயற்திட்டத்தின் கீழ் முழுமைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பெற்றுக்கொள்ள கூடியதாகவிருந்த தகவல்களின் அடிப்படையில் 2 ஆம் மற்றும் 4 ஆம் பொதிகளின் கீழான நீரோடைப் புனரமைப்புச் செயற்பாடுகள், இரணைமடு குளத்தின் புதிய ஆரக்கதவுப் பொருத்துகை, பாலங்கள் மற்றும் வெள்ள அணை கட்டுமானங்கள் மற்றும் கட்டுமானப் புனரமைப்புகள் என்பன 2017 திசெம்பர் 31 இல் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. நிகழாண்டின் இறுதியில் அடைய மூல இலக்கிடப்பட்ட ஏனைய செயற்பாட்டு வேலைகளான 01 ஆம் பொதியின் கீழான அணை புனரமைப்பு, 03 ஆம் பொதியின் கீழான பத்திரிப்பு பாதுகாப்பு கட்டுமானங்கள் மற்றும் 05 ஆம் பொதியில் கீழான உயர்நில ஏற்று நீர்ப்பாசன கால்வாய் கட்டுமான வேலைகள் என்பவற்றின் பௌதீக முன்னேற்றங்கள் 65 சதவீதத்திலிருந்து 85 சதவீதமான வீச்சில் காணப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) ஒப்பந்தத்தின் மூலதிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத நீரோட்டப்பாதை புனரமைப்பின் கீழான கால்வாய் அனுகு கதவு மற்றும் திசைதிருப்பும் கால்வாய் கட்டுமானம் உள்ளடங்களாக 07 வேலைகள் ரூபா 30.17 மில்லியன் கிரயத்தில் நிகழாண்டின்போது பூரணப்படுத்தப்பட்டிருந்தது. அவதானிக்கப்பட்டதுடன் தடுப்புக் கட்டமைப்பின் புனரமைப்பின் கீழான கல்படுக்கைத்தளம் மற்றும் பத்திரிப்பு பாதுகாப்பு வேலைகளின் கீழான மேல்தள கொங்ரீட் தடுப்புச்சுவர் கட்டுமானம் ஆகிய ஏனைய வேலைகள் ரூபா 29.61 மில்லியன் கிரயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்தான அனுமதி கணக்காய்வுக்கு கிடைக்கத்தக்கதாயிருந்திருக்கவில்லை.

(ஆ) 2018 யூலையின் போது களப்பரீட்சிப்பு மேற்கொண்டபோது இரணைமடு பகுதியிக் கட்டப்பட்ட மேல்மட்ட கீழ்மட்ட அணை விளம்பிக்கட்டுமானம், பாலங்கள் மற்றும் வெள்ள அணைகள், கீழ்கட்டமைப்புகள் என்பவற்றில் வாகன நகர்வு மற்றும் மிகை மழை காரணமாக வெடிப்புக்களும், கழுவிச் செல்லப்பட்டமையும் அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், புல்பதித்தல், ஏனைய மண் பாதுகாப்பு வேலைகள் மீது ரூபா 13.26 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதும் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) 05ம் ஒப்பந்த பொதியின் கீழான ஏற்று நீர்ப்பாசன திட்ட புனரமைப்பில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரருக்கு, மண் மீள் நிரப்புவதற்கான அகழ்தல், மட்டுப்படுத்தல், நீரூற்றுதல் மற்றும் இறுக்குதல் நோக்கத்திற்கான 10,642 கியூப் அளவீட்டுத் தவறு காரணமாக 2017 திசெம்பரில் ரூபா 8.51 மில்லியன் மேலதிக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ் மேலதிக கொடுப்பனவு 2018 பெப்ரவரியில் மீள அறவிடப்பட்ட போதிலும் மேலதிக காசோட்டத்தினாலான நன்மையை ஒப்பந்தக்தாரர் அனுபவிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது.